1981 பிப்ரவரி 7]

திரு. கெ. சொக்கலிங்கம்: தலைவரவர்களே, விவசாயப் பயிர்களை எலிகள் அழிக்கின்றன. அந்த எலிகளை ஒழிக்க ப்பல மருந்துகளைக் கண்டு பிடித்ததாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த எலிகளை ஆதிவாசிகள் அதிகமாகப் பிடிக்கிறார்கள். அந்த ஆதிவாசிகளுக்கு அரசாங்கம் மூலமாக ஏதாவது உதவித்தொகை வழங்கப்படுமா? அவர்களுக்கு இதில் முன்னுரிமை கொடுத்து ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெரிவித்தேன். எலிகள் இருக்கின்ற பகுதிகளில் விவசாயப் பெருமக்களுக்கு என்னென்ன வகைகளில் வேளாண்மைத் துறை துணை செய்கிறது என்பதைக் குறிப்பிட்டேன். அதைத் தவிர, வேறு செயற்குறிப்பு இல்லை.

குறுவைப்பட்ட நெல் விளைச்சல்.

*வினா எண். 232—திரு. கு. ரமணி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த வருடத்தில் குறுவை நெல் விளைச்சல் அமோகமாக ஏற்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், சென்றாண்டைவிட இந்த ஆண்டு அதிக விளைச்சலின் அளவு என்ன?

(இ) தஞ்சையைவிட திருச்சியில் விளைச்சல் ஏக்கராவுக்கு அதிகம் கிடைக்கிறதா?

(ஈ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. காளிமுத்து: (அ) ஆம்,

(ஆ) குறுவைப்பட்டம் என்று குறிப்பது பெரும்பாலும் தஞ்சை, திருச்சி மாவட்டங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தின் சிதம்பரம் பகுதியிலும் ஆகும்.

தஞ்சையிலும் சிதம்பரம் பகுதியிலும் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு அதிக விளைச்சல் ஹெக்டேருக்கு முறையே 418 கிலோவும், 448 கிலோவும் ஆகும். ஆனால் திருச்சியில் சென்ற ஆண்டைவிட இவ்வாண்டு விளைச்சல் ஹெக்டேருக்கு 62 கிலோ குறைவாகும்.

[1981 பிப்ரவரி 7

(இ) & (ஈ) இல்லை. தஞ்சையில் சராசரி விளைச்சல் ஒரு ஹெக்டேருக்கு 4351 கிலோ. திருச்சியில் சராசரி விளைச்சல் ஹெக்டேருக்கு 3550 கிலோ.

திரு. கு. ரமணி? தலைவரவர்களே, குறுவை நெல், ஒரே ரகமான நெல் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் இவ்வளவு அதிக விளைச்சல் கிடைக்கக் காரணம் என்ன? திருச்சியில் அம்மாதிரி யாக விளைச்சல் கிடைக்காததற்குக் காரணம் என்ன என்று அறிவிப்பதோடு, திருச்சியிலும் தஞ்சையில் கிடைப்பதைப் போன்று கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தஞ்சையில் பெரும்பாலும் ஏ.டி.டி. 31, ஏ.டி.டி. 4 ஆகிய குறுவை நெல் வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. திருச்சியிலே அதனுடைய இயல்புக்குத் தகுந்தவாறு அதே நெல் வகைதான் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. எனவே, விளைச்சலுக்கு குறுவை நெல் வகையை மாற்றியது காரணம் இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நெல் ரகத்தினுடைய தகராறு அல்ல என்று அமைச்சர் குறிப்பிடுகிறார். அப்படி யானால், அதற்கு இடப்படுகின்ற உரம் அல்லது அந்த மண்ணினுடைய வளமை, இவற்றில் ஏதாவது மாற்றங்கள் ஏற்பட்டிருக் கிறதென்றால், அதைப்பற்றி விவசாய இலாகாவிடம் சொல்லி, ஆராய்ச்சி பண்ணி விளைச்சலை, இங்கு கிடைப்பதுபோல் அங்கும் அதிகம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதன் காரணத்தைக் கண்டறிய துறை நிச்சயமாக முற்படும். முற்பட்டு அந்தக் குறையை நிவர்த்தி செய்ய என்ன வழிவகை என்பதையும் ஆராயும்.

1981 பிப்ரவரி 7]

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இந்தத் தடவை குறுவை நெல் அதிகமாக விளைந்திருந்தும் விற்க முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டபொழுது அது விலை போகாமல் இருந்தது என்று அரசாங்கத்திற்கு மனு செய்தது அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன வழி செய்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் ஜில்லாவில் அதிகமான விளைச்சல் குறுவையில் கிடைத்தது என்று அமைச்சர் சொன்னார். வருகிற ஆண்டிலே கூட, இன்னும் அதிகமாக உற்பத்தியை எதிர்பார்க்கவேண்டும் என்றால், விவசாயிகளுக்கு தண்ணீர் வருவதற்கு முன்னாலே, சுருட்டுபா நாற்று விட்டு, தண்ணீர் வந்தபிறகு, அந்த நாற்றை பறித்து நடுபவருக்கு அதற்கு ஏதுவாக, அரசு உதவி செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு குறுவை நெல் அதிகமாக மகசூல் கிடைத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு கிடைத்ததைவிட இந்த ஆண்டு எவ்வளவு அதிகமாகக் கிடைத்தது என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த ஆண்டு தாளடி, சம்பா மகசூல் பாதிக்கப்பட்டது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது தகவல் வந்ததா? அப்படி பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது சலுகை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்த ஆண்டைப் பற்றிய தகவல்தான் என்னிடம் இருக்கிறது. பாதிக்கப்பட்டதைப் பற்றிய விவரம் அரசுக்குத் தெரியாது.

வெள்ளாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண். 233— திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூரிலிருந்து திட்டக்குடி செல்லும் பெருவழித் துறை சாலையில் ஓடும் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?